# அளவெட்டி வடக்கு நோக்கி படையினர் நகர்வு


விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆவணி 05 இதழ் 192

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 21 — 08 — 1992


(யாழ்ப்பாணம்) வலிவடக்கில் நேற்று திடீரென மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின் போது மேலும் முன்னேற முயலும் இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் கடும் மோதல் இடம் பெற்று வருகிறது.

(2-ம் பக்கம் பார்க்க)

## 10,000 மக்கள் நேற்று வெளியேற்றம்

(யாழ்ப்பாணம்) இளவாலை, பெரியவிளான், சிறுவிளான், துர்க்காபுரம், தெல்லிப்பளை, அளவெட்டி ஆகிய இடங்களிலிருந்து 10,000க்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாக தெரியவருகிறது.

நேற்று இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையால் வலி வடக்கு மக்கள் உடுத்த உடுப்

(4-ம் பக்கம் பார்க்க)

## வலி வடக்கு பகுதியில் காயமடைந்தவர்கள்

(யாழ்ப்பாணம்) வலிவடக்குப் பகுதியில் நேற்றுக் காலை மேற்கொள்ளப்பட்ட முப்படைத் தாக்குதலில் படுத்த காயங்களுக்குள்ளாகி யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்போர் விபரம்: பி. மகாலிங்கம் (47 வயது)

(4-ம் பக்கம் பார்க்க)

## ● 'ஒபரேஷன் பூகம்பம்'

# பாரிய இராணுவ நடவடிக்கை

# யாழ். குடாவில் ஆரம்பமானது

## புலிகள் எதிர் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடா மீது 'ஒபரேஷன் ஏர்த் குவாய்க்' (ஒபரேஷன் பூகம்பம்) என்னும் பாரிய இராணுவ நடவடிக்கை நேற்று வலி வடக்கிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

விமானப்படை, கடற்படையின் உதவியுடன் நேற்று அதிகாலை ஆரம்பமான இந்த இராணுவ நடவடிக்கையின்போது புலிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையே கடும் சமர் ஏற்பட்டது.

(2ம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தின் தாக்குதலில் ஐந்து பொதுமக்கள் பலி

(காங்கேசன்துறை) வலி. வடக்கு பகுதியில் நேற்று ஸ்ரீலங்கா படையினரால் மேற்கொள்ளப்பட்ட ஷெல், துப்பாக்கிச்சூடு தாக்குதல்களினால் ஐவர் பலியானார்கள். பலர் படுகாயமடைந்தனர்.

செ. கணேசமூர்த்தி (அளவெட்டி). சின்னப்பாக் குருக்கள் (பன்னாலை), அ. குணரத்தினம் வயது 35 – பன்னாலை), மற்றும் 12 வயதுச் சிறுவன் உட்பட ஐவர் பலியானார்கள்.

அ. குணரத்தினம் என்பவர் தமது வயோதிபத் தந்தையை அழைத்து வருவதற்குச் சென்ற சமயம் அளவெட்டி வடக்கு வாசிகசாலைக்கருகாமையில் இராணுவத்தினரால் சுடப்பட்டு இவர் இறந்ததாக கூறப்படுகிறது.

(86-56)

## 200க்கும் மேற்பட்டோர் படையினரிடம் சிக்கினர்

(காங்கேசன்துறை) வலி. வடக்கில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின்போது அளவெட்டி வடக்குப் பகுதியில் இருநூறுக்கும் மேற்பட்டோர் இராணுவத்தின் பிடியில் சிக்கியுள்ளதாக கூறப்படுகிறது

(4ம் பக்கம் பார்க்க)

## ஹெலி, சீபிளேன் மீது புலிகள் தாக்குதல்

(யாழ்ப்பாணம்) பண்டத்தரிப்பு, வடலியடைப்புப்பகுதிகளில் நேற்று மாலை பல தடவை வட்டமிட்டு நோட்டம் பார்த்த சீ-பிளேன், ஹெலிக்கொப்டர் ஆகியவற்றின் மீது விடுதலைப்

(4ம் பக்கம் பார்க்க)

## 'முரசொலி' ஊழியர்கள் மறியல் போராட்டம்

(யாழ்ப்பாணம்) முரசொலிப் பத்திரிகை ஊழியர்கள் ஒன்பது அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நேற்று வியாழக்கிழமை மறியல் போராட்டம் நடத்தினார்கள்.

ஊழியர்களின் கடந்த 3 மாதச் சம்பளங்களை நிர்வாகம் கொடுக்காதது, கடந்த ஆறு வருடங்களாக ஊழியர்களின் சம்பளங்களில் இருந்து கழிக்கப்பட்ட சேமலாம நிதியை உரிய இடத்தில் செலுத்தாதது உட்பட 9 அம்சக் கோரிக்கைகளை முன்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஹெலியிலிருந்து பிரசுரம்

(யாழ்ப்பாணம்) வலி வடக்கு, வலி. மேற்குப் பகுதியில் கரையோரப் பகுதியிலிருந்தும் இராணுவ நடவடிக்கை நடைபெறும் இடங்களிலிருந்து மக்களை வெளியேறுமாறு கோரும் துண்டுப்பிரசுரங்கள் ஹெலியிலிருந்து நேற்றுக்காலை வீசப்பட்டன.

(4-ம் பக்கம் பார்க்க)

## நவீன யுத்த தளபாடங்கள் சகிதம் படையினர் தாக்குதல்

(கொழும்பு) விடுதலைப் புலிகளின் முழுக் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் யாழ்ப்பாணப்பிராந்தியத்தை கைப்பற்றும் இறுதி இராணுவ நடவடிக்கை நேற்று ஆரம்பிக்கப்பட்டதாக 'ஏஜென்ஸி' செய்திகள் தெரிவித்தன.

சீனாவில் செய்யப்பட்ட ரி-56ரக போர் டாங்கிகள், ரி-85 எனப்படும் இராணுவ வாகனங்கள் குண்டு பொழியும் ஹெலிகப்டர்கள் என பலவித நவீன ஆயுதங்கள் சகிதம் ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் வடமாகாணத்தில் தாக்குதல் தொடங்கியிருக்கின்றார்கள்.

இந்த இராணுவ நடவடிக்

(4ம் பக்கம் பார்க்க)

## 2 படையினர் பலி

(யாழ்ப்பாணம்) யாழ். குடாநாட்டில் நேற்று இடம்பெற்ற கடும் மோதலில் இரு படையினர் உயிரிழந்ததுடன் பல படையினர் படுகாயமடைந்ததாக கூட்டுப் படைத் தலைமையகம் அறிவித்தது.

2-ம் பக்கம் பார்க்க

## க. பொ. த. பரீட்சை வலி வடக்கில் நடக்கவில்லை

(யாழ்ப்பாணம்) வலிவடக்குப் பகுதியில் க. பொ. த (உயர்தர) பரீட்சைகள் நடைபெறவில்லை.

இப்பகுதியில் இராணுவத்தினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையினையடுத்தே மக்கள் இடம்பெயர்ந்துள்ளதனால் மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றமுடியாத நிலைஏற்பட்டது. இத

(4-ம் பக்கம் பார்க்க)

## குடியிருப்புகளை நோக்கி விமான, பீரங்கி, ஷெல் தாக்கு

(யாழ்ப்பாணம்) வலி வடக்கு, வலி மேற்கு மற்றும், குடாநாட்டின் கரையோரப் பகுதிகளில் நேற்று அதிகாலை முதல் பல மணி நேரம் குண்டுவீச்சு விமானங்களும், கடற்பரப்பிலிருந்து பீரங்கிகளும், சகல படை முகாம்களிலிருந்து அகோர ஷெல் தாக்குதல்களும் இடம் பெற்றன.

வலி வடக்கில் அதிகாலை 5-30 மணி முதல் தெல்லிப்பளை, அளவெட்டி வடக்கு,

(3ம் பக்கம் பார்க்க)

வனம் பேணிட
கவனம் செலுத்துவோம்

# வரி விளம்பரம்

### நூல் கண்காட்சியும் விற்பனையும்

ஈழத்து நூல் கண்காட்சியும் விற்பனையும் எம்மால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. சகலவித மான இந்திய, இலங்கை தமிழ், ஆங்கில, சமய, விஞ்ஞான கலை, இலக்கிய, சோதிட நூல்களை தெரிவு செய்யுங்கள். ஸ்ரீகாந்த் புத்தகசாலை, நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்பாக பருத்தித்துறைவீதி, நல்லூர். (எ2335)

### வைத்தியம்

செங்கண்மாரி, சூடற்புண், தொய்வு வாதரோகங்கள், வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலை கால் அவியல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணைவைத்தியர் சி. இராசரத்தினம், 121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (சி-6561)

### நல்லை ஆதீனத்தில் பாலாஜி

புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் ஈழத்து எழுத்தாளர்களின் நாவல்கள், பக்தி பரவசமூட்டும் சமய புத்தகங்கள், இந்திய நாவல்கள் மற்றும் பல பாலாஜி புத்தகசாலை, நல்லைஆதீனம், நல்லூர். (எ-2373)

### இலவச திருமணசேவை

30 வயது, புனர்பூசம், செவ்வாய் 8, கிரகபாவம் 40, சுவிசில் வசிப்பவருக்கு மணமகன் சுவிசில் தேவை. சகல துறைகளிலும் மணமக்கள் உண்டு. சந்திப்பு ஞாயிறு காலையில் து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. (சி-6697)

### புலமைப்பரிசில் பரீட்சை (ஆண்டு 5)

எமது நிறுவனத்தால் வெளியிடப்பட்ட மாதிரி வினாத்தாள்களை இங்கு பெற்றுக் கொள்ளலாம். தொகையாகப்பெறும் கல்வி நிலையங்களுக்கும் பாடசாலைகளுக்கும் விசேஷ கழிவு உண்டு. புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம், (சி-6700)

### அதிர்ஷ்டம் அழைக்கிறது

எத்தகைய தீராத கஷ்டங்களும் நீங்கி சாந்தியடைய சாதகத்துடன் வாருங்கள் பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். ஸ்ரீசக்தி கணச உபாசகர், ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம் (ஸ்ரீகைலாச பிள்ளையார் கோவில் சந்தி). 96, கோவில் வீதி, நல்லூர். (சி 6701)

### சோதிடம்

Anpugee, Shyanbugee ஆக 30-06-1992லிருந்து தனியாக இயங்குகின்றது. புதியவர்களுக்கு, நண்பர்களாக விருந்தினர்களாக மட்டுமே. சோதிடம் சொல்லித்தர முடியும் 9-9-1992இற்கு பின்னர் 'சோதிடமற்ற புதியகலை'' Russiva, 540, ஆஸ்பத்திரி வீதி, யாழ். நகர். (சி-6714)

### மணமகன் தேவை

இந்து சைவபோசன, A/L சித்தியெய்திய குடும்பப் பாங்கும் பண்புமுள்ளமணமகளுக்கு 35 வயதிற்கு மேற்பட்ட தகுந்த வரன் தேவை. தகுந்த சீதனம் கொடுக்கப்படும். 38, திருநெல்வேலி சிவன்கோவில் றோட், திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம். (சி-6709)

### தேவை

வேப்பம் விதை தேவை. அண்ணா கோப்பி கடைகளிலும் ஒப்படைக்கலாம். மில்க் வைற், யாழ்ப்பாணம் (ஏ-2381)

### தோத்திரத் திரட்டு

நல்லை கந்தன் ஆலயமுகப்புடன் தினசரி வழிபாட்டுதோத்திரத் திரட்டு விலை ரூபா20/- திருவிழாக்கால மலிவுவிற்பனையாக ரூபா 15/-. நல்லை ஆதீனத்திலுள்ள அஷ்டலக்ஷ்மி புத்தகசாலையில் கிடைக்கும். (சி-6710)

### வாங்கலாம்/விற்கலாம்

உங்கள் கடிகாரங்கள் பழையனவாகிவிட்டனவா? அவற்றிற்கு நியாய விலை போட்டு புதியன எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். உதிரிப்பாகங்களுக்கான றேடியோக்கள், கடிகாரங்கள், மேசை மணிக்கூடுகள் வாங்கப்படும். டில்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (பழைய விகாரை முன்பாக) (சி-6707)

### விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையிலுள்ள சுவிஸ் மணிக்கூடுகள் Roamer, Wyler, Titoni, Westend, Mondia, Favreleuba, Seiko, Citizen போன்றவை. Rs. 200/- முதல் பல விலைகளிலும் உண்டு. கடிகாரங்கள், றேடியோக்கள் திருத்திக்கொள்ளவும், உத்தரவாதத்துடன் வாங்கவும் டில்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-6706)

## அகதி முகாம்களுக்கு 3,500 கிடுகுகள் தேவையாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள அகதிகள் முகாம்களில் அமைக்கப்பட்டுள்ள கிடுகுக் குடிசைகளை மறுசீரமைப்பு செய்வதற்கு 3 500கிடுகுகள் தேவைப்படுவதாக இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையினர் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் மாரிகாலத்துக் கிடையில் மேற்படி குடிசைகள் உடன் சீரமைக்கப்படஇருப்பதினால் கிடுகுகள் வைத்திருப்பவர்கள் தம்முடன் தொடர்புகொள்ளும்படி செஞ்சிலுவைச் சங்கம் கேட்டுள்ளது. [வி]

## காது கேட்கும் கருவிகள் வழங்க ஏற்பாடு

(மானிப்பாய்)

யாழ். மாவட்டத்தில் காது கேட்காமல் இருக்கும் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்களுக்கு காது கேட்கும் கருவிகளை வழங்குவதற்கு வடகு கிழக்கு மாகாண சபையின் சமூக சேவைத் திணைக்களம் முன்வந்துள்ளது.

இது சம்பந்தமான விபரங்களை தற்போது யாழ் சமூக சேவைத் திணைக்களம் திரட்டி வருகின்றது. இக்கருவிகளைப் பெற விரும்புகிறவர்கள் காது மூக்கு தொண்டை வைத்திய நிபுணரிடம் சென்று அவரது வைத்திய அறிக்கையைபெற்று தத்தமது பகுதி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் இருக்கும் சமூக சேவைகள் அலுவலரிடம் தொடர்பு கொள்ளுமாறு யாழ். சமூக சேவைத் திணைக்களம அறிவித்துள்ளது. (71)

## உணவு முத்திரை பெறுவோர் பெயர் பட்டியல் தயாரிக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

ஏழாவது சுற்று வறுமை நிவாரண உணவு முத்திரைகளைப் பெறுபவர்களின் பெயர்ப் பட்டியல் தயாரிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அரசாங்க அதிபர்களும் பணிக்கப்பட்டுள்ளார்கள்

இப்பட்டியலில் உணவு முத்திரையைப் பெறுபவர்களின் தொடர் இலக்கம், குறியீட்டு இலக்கம், குடும்பத் தலைவரின் பெயர், முகவரி, பெற்றுக் கொண்ட உணவு, மண்ணெண்ணெய் முத்திரைகளின் எண்ணிக்கை இவற்றின் மாதாந்தப் பெறுமதி முதலான விபரங்கள் இடம்பெறுகின்றன

மேற்கூறப்பட்ட விபரங்கள் அடங்கிய 4 பிரதிகள் கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவு ரீதியாகத் தயாரிக்கப்பட்டு 1-வது பிரதி வறுமைநிவாரண ஆணையாளருக்கும், 2வதுபிரதி பிரதேச செயலர் பணிமனையிலும், 3-வது பிரதி சம்பந்தப்பட்ட கிராம சேவை உத்தியோகத்தர் பணிமனையிலும் பொதுமக்களது பார்வைக்கு வைக்கப்படவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (161)

## சூழல்பாதுகாப்பு வாசகப்போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் சூழல் பாதுகாப்புப் பகுதியினால் நடத்தப்பட்ட சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வு வாசகப் போட்டியில் கலந்து கொண்டவர்களில் பரிசுக்குரியவர்களாகத் தெரிவுசெய்யப்பட்டவர்கள் விபரங்கள் வருமாறு:

க. சுமதி, 48/5 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், கு காந்தன், இல. 20, தொடர்மாடி குருநகர், யாழ்ப்பாணம், கா. பிறேமசுதா, வத்திராயன் வடக்கு தாளையடி, நா. விக்னேஸ்வரன், 36 புறாடி ஒழுங்கை யாழ்ப்பாணம் ந. கிருஷ்ணபவன், நல்லாயன் வீதி, ஜெயபுரம் - பல்லவராயன் கட்டு, பூநகரி. த. ரேணுகா, பிள்ளையார் கோவிலடி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி. வை. வைதேசி, சட்டைப்பிராய், யாழ்ப்பாணம் ச. செங்காதரன், அச்சுவலி வடக்கு, அச்சுவேலி. வே. ஸ்ரீசலறஜனி ஏரந்தனை, புத்தூர் வடக்கு புத்தூர், க. இளமதி, கலைமதி ஒழுங்கை, கட்டைப்பிராய், கல்வியங்காடு.

சூழல் மாசடைதல், காடழித்தல், நீர்ப்பயன்பாடு தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காக சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வு வாசகப் போட்டி நடத்தப்பட்டது மேலும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் சூழல் பாதுகாப்பு பகுதி காடு வளர்ப்புத் திட்டங்களையும் வீதியோர மரநடுகை முயற்சிகளிலும் ஈடுபட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (அ

### ஒபரேஷன் பூகம்பம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இம்மோதலில் இராணுவ தரப்பில் பலர் இறந்தும், காயமடைந்தும் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக்காலை 5-30 மணிக்கு யாழ் குடாநாடு மீதான இராணுவத்தாக்குதல் ஆரம்பமாகியது. வலிகாமம் வடக்குப் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவம் தெல்லிப்பழை பகுதியிலிருந்தும் சேந்தான்குளம் பகுதியிலிருந்தும் இருவேறு முனைகளில் முன்னேற முயன்றனர்


இராணுவத்துக்கு உதவியாக இரு ஹெலிகொப்டர்களும், இரு குண்டு வீச்சு விமானங்களும் தொடர்ச்சியான தாக்குதலை நடாத்தின.

முன்னேற முயன்ற இராணுவத்தினருக்கும், விடுதலைப்புலிகளுக்கும் மிகக் கடுமையான மோதல்கள் ஏற்பட்டன.

வலிகாமம் வடக்கின் கந்தரோடை, அளவெட்டி, சண்டிலிப்பாய், மாகியபிட்டி, இளவாலை, மாதகல், பண்டத்தரிப்பு, சங்கானை, விளான் ஆகிய பகுதிகளில் ஷெல்கள் வீழ்ந்துவெடித்ததனால் பலர் காயமுற்றனர்.

வலிகாமம் வடக்குப் பகுதியில் இராணுவத்தினர் முன்னேற முயன்றபோது நடாத்தப்பட்ட பல்வேறு தாக்குதலில் பெருமளவு மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம்பெயர்ந்தனர்.

வலிகாமம் வடக்குப் பகுதி




ஜாம் (JAM) போத்தல்கள் தேவை

ஹார்லிக்ஸ், விவா போத்தல்கள் மூடியுடனும், ஜாம் போத்தல்களும் விலைக்கு தொடர்ந்து கொள்வனவு செய்யப்படுகிறது.

**TASTE LINE INDUSTRIES (pvt.) Ltd.**

14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(ஏ-2376)

## நல்லூர் தெய்வீக இசை அரங்கு

இன்றைய இசை நிகழ்ச்சி
வயலின் சோலோ
வயலின்
ஆர். ராதாகிருஷ்ணன்
எஸ். கோபிதாஸ்
மிருதங்கம்
கே. கண்ணதாஸன்
தவில்
கே. ஆர். புண்ணியமூர்த்தி
கெஞ்சிரா
எஸ். நாகராஜன்
எஸ். வேல்மாறன் -கடம்
முகர்சிங் எஸ் ராஜா -

### அளவெட்டி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று அதிகாலை 5 மணியளவில் பன்னாலை, அம்பனை பகுதிகளினால் முன்னேறிய இராணுவத்தினர் அம்பனை வயல்வெளியை அடைந்து அங்கிருந்து அழகொல்லை நாயர் ஆலயத்தையடைந்து பின்னர் அளவெட்டி வடக்கு சீனைகலட்டி ஞானோதய வித்தியாசாலை வரை சென்ற பின்னர்தான் அப்பகுதியில் வாழ்ந்த மக்களுக்கு இராணுவத்தின் வரவு தெரியவந்தது தற்போது படையினர் இப்பாடசாலையில் நிலைகொண்டுள்ளனர்.

ஆகாயத்தை நோக்கி சரமாரியாக துப்பாக்கிச்சூடு நடத்தியபடி இரவோடு இரவாக வந்த இராணுவத்தினரைக் கண்டு அதிகாலைவேளை நித்திரை விட்டெழுந்த மக்கள் பரபரப்படைந்தனர். அல்லோலகல்லோலப்பட்டு ஓடினர் என்று இராணுவத்தை நேரில் கண்டு தப்பி வந்தவர்கள் கூறினர்.

அளவெட்டி வடக்கிலிருந்து சிறுவிளானை நோக்கி இராணுவத்தினர் நகர முயற்சித்து வருவதாகவும் அப்பகுதியில் இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் மோதல் இடம்பெற்று வருவதாகவும் கூறப்படுகிறது.

அளவெட்டி வடக்கு நோக்கி இராணுவம் நகர்ந்த போது சேந்தான்குளத்திலிருந்தும் இராணுவம் மாதகலை நோக்கி நகர ஆரம்பித்ததாகவும், அங்கும் விடுதலைப்புலிகளுக்கும், இராணுவத்திற்கும் இடையில் மோதல் நடைபெற்று வருவதாகவும் கூறப்படுகிறது. (86-56-109-ரி)

### 2 படையினர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்தும் யுத்தம் மிக உக்கிரமாக நடக்குமென எதிர்பார்க்கப்படுவதால்படையினர் தரப்பில் இழப்புகள் அதிகரிக்குமென கேர்ணல் சரத்முனசிங்க கூறினார்.

இந்த யுத்தத்தில் படையினர் மிகக்கடுமையாகப் போரிட வேண்டியிருக்குமெனவும் அவர் கூறினார். (சி)

ஸ்ரீலங்கா இராணுவம் மேற்கொண்ட கடும் தாக்குதலில் அப்பகுதியிலுள்ள பல பரீட்சை நிலையங்களில் கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சைகள் தடைப்பட்டன. பரீட்சை நிலையங்களிலிருந்து பல மாணவர்கள் திரும்பிச் சென்றனர். (56.86-சு-ரி-சி)

## மாட்டுவண்டி சவாரிப்போட்டி ரத்து செய்யப்பட்டுள்ளது

ஆவரங்காலில் 22-8-92-ம் திகதி சனிக்கிழமை நடைபெறவிருந்த மாட்டுவண்டி சவாரிப்போட்டி தவிர்க்கமுடியாத காரணத்தால் மறு அறிவித்தல்வரை ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

ப. தியாகராசா.

ஆவரங்கால். (சி-6715)

### அசம்பாவிதங்கள் காரணமாக உயிரிழந்த

# அரச, கூட்டுத்தான ஊழியர்களின் நஷ்டஈடு விண்ணப்பங்கள் தேக்கம்!

(யாழ்ப்பாணம்)

அசம்பாவிதங்கள் காரணமாக உயிரிழந்த அரச, கூட்டுத்தாபன ஊழியர்களது இறப்புச் சம்பந்தமாக நட்டஈடு கோரி அவர்களது பராமரிப்பிலுள்ளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட சுமார் 50 விண்ணப்பப்படிவங்கள் எதுவிதமான செயல்பாடுகளும் இல்லாமல் புனர்வாழ்வு புனர்நிர்மாணப் பணிமனையில் தேங்கிக்கிடக்கின்றன என்று தெரியவருகிறது.

அரச, கூட்டுத்தாபனங்களில் கடமையாற்றிய மேற்படி ஊழியர்கள் சம்பந்தமான மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் அவரவர்கள் பணிபுரிந்த அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்ட கடிதங்களுக்குரிய பதில்கள் வந்து சேராமையாலேயே இவ்விண்ணப்பங்கள் தேங்கிக் கிடப்பதாகக் கூறப்படுகிறது.

சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு புனர்வாழ்வு-புனர்நிர்மாணப் பணிமனையினரால் அனுப்பப்பட்ட கடிதங்களுக்குரிய பதில்கள் அனுப்பட்படாமை சம்பந்தமாகவோ, அல்லது இக் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்வதற்காக அவ்வத்திணைக்கள மட்டத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் சம்பந்தமாகவோ அரச அதிபருக்கு தெரிவிக்குமாறு யாழ். மாவட்டத்தின் எல்லாத் திணைக்களங்களுக்கும் யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார்.

தேங்கிக்கிடக்கும் விண்ணப்பங்களில அரைவாசிக்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் கல்வித்திணைக்களத்தைச் சேர்ந்தவையென்றும், மிகுதியானவை குடாநாட்டின் ஏனைய திணைக்களங்களைச் சேர்ந்தவைகள் என்று மேலும் தெரியவருகின்றது. (இ-161

## சுற்றுநிருபங்கள் தனிச்சிங்களத்தில்

[பண்டத்தரிப்பு]

கொழும்பிலுள்ள சுகாதார மகளிர் விவகார அமைச்சு தனிச்சிங்கள மொழியில் சுற்றுநிருபங்களையும், கடிதங்களையும் தொடர்ந்து அனுப்பிவருகின்றது.

கடந்த வாரம் யாழ் சுகாதாரப் பிராந்தியத்திலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளுக்கு இந்த அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள சுற்றுநிருபங்கள் யாவும் தனிச்சிங்கள மொழியில் இருக்கக் காணப்பட்டன. [72]

# பெற்றோலிய கூட்டுத்தாபனம் வருடம் ரூ.100 கோடி நஷ்டம்

(கொழும்பு)

பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு தற்போது 100 கோடி ரூபா வருடாந்தம் நஷ்டம் ஏற்பட்டு வருகிறது.

ரூபாவின் மதிப்புக்குறைவு ஏற்பட்டுள்ளதால் டீசல், மண்ணெண்ணை விற்பனவு மூலம் பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு வருடா வருடம் இந்த நஷ்டம் அதிகரித்து வருவதாக பெற்றோலிய கூட்டுத்தாபனத் தலைவா தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு பகுதிக்கான எரிபொருள் விநியோகம் சீரின்மையும் ஒரு காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. கே,

## இராசி பலன்

21-08-1992
வெள்ளிக்கிழமை
(தமிழுக்கு ஆவணி 5)

அட்டமி மு இ 10.45 வரை, கார்த்திகை மு. இ. 9 30 வரை இராகுகாலம் பகல் 10.35 முதல் 12.05 வரை, சுபநேரம் காலை 6.05 முதல் 7.35 வரை. ஸ்ரீ கிருஷ்ணஜெயந்தி.

மேடம்: திருப்தியற்ற செய்தி, உறவினர்பகை, பதட்டம்.

இடபம்; ஸ்தான மாற்றம் பணவரவு மனக்களிப்பு.

மிதுனம்: நம்பிஏமாறுதல், திடீர்செலவு பணமுடை.

கடகம்: காரியஅனுகூலம், தொழில திருப்புமுனை வெற்றி

சிங்கம்: பயணசெலவு, இனசன வரவு, மன உறுதி.

கன்னி: டழிபாவம், உடல் பிணி, தாழ்வுநிலை.

துலாம்: பேச்சில்கடுமை, வயிற்றுவலி துயரம்.

விருச்சிகம்: தொழில்கீர்த்தி நண்பர் ஆதரவு பாராட்டு.

தனுசு: உறவினர் நன்மை குடும்பசுகம், காரியசித்தி.

மகரம்: வீண்செலவு குறுக்குவழி, அகால உணவு

கும்பம்: புதியகடன் குடும்ப மோதல், வெறுப்பு

மீனம்: முயற்சிபலிதம், பொருள்வசதி தெய்வதரிசனம்

— ஜோஸ்யர்

### பத்திரிகையாளர் தாக்குதல்

# சந்தேக நபர் கைது

(கொழும்பு)

'அத்த' பத்திரிகை கேலிச் சித்திரக்கார் கத்திக்குத்துக்கு ஆளாகியது தொடர்பாக ஒருவர் சந்தேகத்தின் மீது பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை ஒரு கோஷ்டியினா அவரது இல்லத்தில் புகுந்து கத்தியால் குத்திக் காயப்படுத்தியது தெரிந்ததே.

இச் சந்தேக நபர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டுள்ளார். (கே)

### ★ ஒலிம்பிக்

# கூச்சலிடும்போட்டிவைத்தால் இலங்கைக்கே முதலிடம்

(கொழும்பு)

இலங்கை மக்கள் கூச்சலிடுவதில் திறமைசாலிகள் இவர்களின் திறமையைவெளிப்படுத்த ஒலிம்பிக போட்டிக்கு அனுப்பி வைக்கவேண்டும் என்று தகவல்துறை ராஜாங்க அமைச்சர் ஏ ஜே. ரணசிங்க தெரிவித்துள்ளா.

அடுத்த ஒலிம்பிக் போட்டியில் கூச்சலிடும் போட்டி இடம்பெற்றால் நிச்சயமாக இலங்கை மூன்று பதக்கங்களையும் தட்டிக் கொண்டுவிடும் என்றும் ராஜாங்க அமைச்சர் மேலும் கூறினர்

படைத்தளபதி மேஜர் ஜெனரல் டென்சில் கொபேகடுவவின் இறுதிச் சடங்கு கனத்தையில் நடைபெற்றபோது அதில் பங்கு பற்றிய திரு. ஏ. ஜே ரணசிங்க கூச்சல் குழப்பத்தின் மத்தியில் கல்லெறிகளுக்கு ஆளாகியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நேற்று முன்தினம் கூச்சலிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பார்த்து இது கனத்தை மயானம் அல்ல. உறுப்பினர்கள் அமைதியை பேணவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலை ஏற்படுமென சபாநாயகா அல்ஹஜ் எம். எச் முகம்மது எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளார் (கே)

### மீசாலை கிழக்கில்

# செஞ்சிலுவைச் சங்க அலுவலகம் திறந்துவைப்பு

(யாழ்ப்பாணம்)

மீசாலை கிழக்கு செஞ்சிலுவைச் சங்க அலகின் காரியாலயத் திறப்பு விழா கடந்த 16ம் திகதி நடைபெற்றது

மேற்படி அலகின் தலைவர் கு. கதிர்காமசேகரர் தலைமையில் இவ்வைபவம் இடம் பெற்றது இதில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட டாக்டர் அருளானந்தம் செஞ்சிலுவைச் சங்கக் கொடியை ஏற்றிவைத்தார். மீசாலை கிழக்கு கிராமசேவை அலுவலர் நா பரமசிவம் காரியாலய பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்து வைத்தார்

மீசாலை கிழக்கு அலகின் அங்கத்தவர்கள் கலந்து கொண்ட இவ்வைபவத்தில் அலகின் செயலாளர் க. கார்த்திகேசு நன்றியுரை நிகழ்த்தினர். [இ]

# 'ஆங்கில அறிவை வளர்க்க வேண்டும்'

(பருத்தித்துறை]

எமது இன்றைய மாணவர்களான எதிர்காலச் சந்ததியினர் சர்வதேச மொழியான ஆங்கில கல்வியில் அதிக ஆர்வம் கொண்டு ஆங்கில அறிவை வளர்த்துக்கொள்வதன் மூலம் தான் முழுமையான அறிவுகளைப் பெற்று வாழ்க்கையில் வெற்றியடைய முடியும்.

இவ்வாறு வடமராட்சி கல்விகோட்ட ஆங்கில கல்வி ஆலோசகர் திருமதி. ஜெயபூபதி குலசிங்கம் பருத்தித்துறை சென்தோமஸ் மகளிர் வித்தியாலய ஆங்கில தின விழாவிலே பிரதம விருந்தினராகச் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்

விழாவிற்கு அதிபர் வணக்கத்திற்குரிய சகோதரி மேரி லொரென்றீன தலைமை தாங்கினர். (52)

### எரிமலை வெடித்தது

(அலாஸ்கா)

அமெரிக்காவில் அலாஸ்காவிலுள்ள சாந்த எரிமலைவெடித்தது.

இந்த எரிமலை வெடித்தபோது கிளம்பிய தீப்பிளம்பு 50 ஆயிரம் அடி உயரத்திற்கு பரவியது.

### அகதிகளைத் திருப்பிஅனுப்ப

# விமானங்கள் தட்டுப்பாடு: கப்பலில் அனுப்ப முடிவு

(சென்னை)

இலங்கை அகதிகளை அனுப்புவதற்கு விமானங்கள் பற்றுக்குறையாக உள்ளதால் இனி அவர்களை கப்பலிலேயே திருகோணமலைக்கு அனுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளதாம்.

தமிழ்நாடு அரசு முதலில் 750 அகதிகளை கப்பலிலேயே அனுப்பவுள்ளது. இவ்வாறாக 10 நாட்களுக்கு ஒருமுறை அனுப்பப்படுவர்.

இதேவேளை ஐ. நா. அகதிகளுக்கான அதிகாரிகள், அகதிகளை விசாரணை செய்ததில் சிலர் தற்போது இலங்கை திரும்ப விரும்பவில்லையென்று தெரிவித்துள்ளனர். (கே)

## நாதன் அருள் நமக்குண்டு

கொல்லவரும் குண்டுகளும்
கூடவரும் ஷெல்லுகளும்
எல்லையிலே கந்தவேளும்
இருக்கையிலே என்னசெய்யும்
கொல்லவரும் பகைவர்களை
கூண்டோடு சாய்த்திடவே
நல்லைநகர் வீற்றிருக்கும்
நாதனருள் நமக்குண்டு
வெல்லவந்த சூரனையே
வேரறுத்துத் தேவர்களுக்கு
இல்லையினித் துயரெனவே
திருந்திடவே செய்தவனும்

வ, யோகானத்தசிவம்.

(இன்று நல்லூர் கந்தசுவாமி கோயில் 19ம் திருவிழா)

### யாழ். மாவட்ட

# பாடசாலைகளுக்கிடையில் உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே 17, 19 வயதுப் பிரிவு உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியை செப். 10-ம் திகதி முதல் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்ற இவ்விடயம் சம்பந்தமான கூட்டத்தில் இதற்கென ஒரு விசேட ஒழுங்குக் குழுவும் நியமிக்கப்பட்டது.

போட்டிகளை லீக்முறையில் நடத்துவதெனவும், ஒவ்வொரு கோட்டத்தினிடமிருந்து முதல் நான்கு இடங்களையும் பெறும் அணிகள் மாவட்டப் போட்டியில் பங்கு பற்றும்.

கோட்டத்திற்கான விண்ணப்பங்கள் பாடசாலைகளிலிருந்து செப்டம்பர் 5ம் திகதிக்கு முன்பதாக அக்கோட்டப் பிரதிக்கல்விப் பணிப்பாளருக்குக் கிடைத்தல் வேண்டும். கோட்டப் போட்டிகள் செப்டம்பர் 10ம் திகதி ஆரம்பமாகும். இப்போட்டிகளின் ஒழுங்குகளை இதற்கென நியமிக்கப்பட்ட விசேட குழு மேற்கொண்டுள்ளது என யாழ். மாவட்ட உடற் கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு த. அருணகிரிராஜா தெரிவித்துள்ளார். (ரி)

### ஆண்டு விழா

[யாழ்ப்பாணம்]

மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையத்தின் 27வது ஆண்டு விழா நிலையத்தலைவர் திரு. மா. சுப்பையா தலைமையில் இம்மாதம் 22-ம் திகதி சனிக்கிழமை இரவு நடைபெறவுள்ளது. [ரி]

### குடியிருப்புகளை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாதகல், மாரீசன்கூடல், பன்னாலை, அம்பனை உட்பட பல பகுதிகளில் 2 பொம்மர்கள், இரு அவ்ரோக்கள் கடும் தாக்குதலை நடாத்த ஹெலியிலிருந்தும் கடும் தாக்குதல நடத்தப்பட்டது.

பலாலி, காரைநகர். மண்டைதீவு. அராலி சந்தி பகுதியிலிருந்து அகோர ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. இச்ஷெல்கள் அளவெட்டி, தெல்லிப்பளை, சுன்னும், மல்லாகம், இளவாலை, மாரீசன் கூடல், பண்டத்தரிப்பு, சுழிபுரம், திருவடிநிலை, பொன்னாலை, வட்டுக்கோட்டை, அராலி உட்பட பல பகுதிகளிலும் வீழ்ந்து பெரும் அழிவுகளை ஏற்படுத்தின.

இதேவேளை திருவடிநிலை, மாதகல், மண்டைதீவு கடற்பரப்பிலிருந்தும் தொடர்ச்சியாக பீரங்கித் தாக்குதல்கள் குடிமனைகளை நோக்கி மேற்கொள்ளப்பட்டன.

[56-86-சி)

★ தமிழகத்திலிருந்து

## தமிழ் அகதிகளை அனுப்புவதற்கு

# நீதிமன்று இடைக்கால தடை

[சென்னை]

தமிழகத்திலிருந்துஇலங்கை அகதிகளை தாயகத்துக்கு திருப்பி அனுப்புவதற்கு சென்னை நீதிமன்றம் இம்மாதம் 28ம் திகதிவரை தடை விதித்துள்ளது.

இது சம்பந்தமாக பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ், தமிழர் தேசிய இயக்கத தலைவர் ப. நெடுமாறன் ஆகியோரி தாக்கல்செய்த மனுக்களை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிபதி எம் ஸ்ரீநிவாசன் இந்த இடைக்காலத்தடையை விதித்தார்.

இலங்கை அகதிகள் கட்டாயப்படுத்தப்பட்டு, தன்னிச்சையாய் தாயகம் செல்ல அவர்கள்சம்மதித்ததுபோன்று கையெழுத்து வாங்கப்பட்டுள்ளதென்றும், தங்களுக்குத் தகவல் கிடைத்திருப்பதாக மனுதார்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

இந்த வழக்கு விசாரணை இந்தமாதம் 27ம் திகதி மீண்டும் எடுத்துக்கொள்ளப்படுமெனத் தெரியவருகிறது (சு)

## பத்மநாபா கொலை வழக்கு

# சுப்புலக்ஷ்மி, கணவர் உட்பட மூவர் பிணையில் விடுதலை

[சென்னை]

பத்மநாபா கொலைவழக்கில் குற்றம்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்த தமிழக முன்னாள் அமைச்சர் சுப்புலஷ்மி, அவரது கணவர் ஜெகதீஸன், வை. ரவிச்சந்திரன் ஆகியோர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இம் மூவரும் 15 000 ரூபா தனிநபர் பிணையிலும் ஈடான தனிநபர்பிணையும் கொடுக்க வேண்டுமென இந்திய உச்ச நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

இவர்கள் 15 நாளுக்கு ஒருமுறை காவல் நிலையத்தில் ஆஜராக வேண்டுமெனவும் சிறப்பு நீதிமன்று அழைக்கும் போது அந்நீதிபதி முன்னிலையில் ஆஜராக வேண்டுமெனவும் உத்தரவிடப்பட்டுள்ளது. (சி)

# அராலி மக்கள்

## அச்சத்தால் இடம்பெயர்வு

(மானிப்பாய்)

அராலியிலிருந்து இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் நவாலி, ஆனைக்கோட்டை, மானிப்பாய் பகுதிகளில் அகதிகளாக தங்கியுள்ளனர்.

நேற்று அதிகாலை முதல் ஊர்காவற்றுறை அராலிச் சந்தியில் நிலைகொண்டுள்ள படையினரால் பலமணி நேரமாக குடிமனைகளை நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஷெல், பீரங்கித் தாக்குதல்களினால் அங்குள்ள மக்களனைவரும் கையில் அகப்பட்ட பொருட்களை எடுத்துக்கொண்டு கால் நடையாகவும் துவிச்சக்கர வண்டிகளிலும் நவாலி, ஆனைக்கோட்டை மானிப்பாய் பகுதிகளில் வந்து அகதிகளாகத தங்கியுள்ளனர்.

இவர்களில் அநேகமானவர்கள் நவாலி அரசடி மகா வித்தியாலயம், மசன். பீற்றேஸ் பாடசாலையிலும் ஏனையோர் அப்பகுதிகளிலுள்ள வீதியோரங்கள், கோவில்கள் தேவாலயங்கள் ஆகியவற்றிலும் தங்கியுள்ளனர். (71-சி)

ஹெலியிலிருந்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அளவெட்டி, தெல்லிப்பழை, மாதகல், மானிப்பாய், சங்குவேலி, பண்டத்தரிப்பு, அராலிப் பகுதியில் நேற்றுக்காலை 6 மணியளவில் இத்துண்டுப்பிரசுரங்கள் வீசப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பிரசுரங்களில் குறிப்பிடப்பட்டிருந்த பாடசாலைகள், கோவிலகளுக்குச் செல்லுமாறும் அதில் கோரப்பட்டிருந்தது. (56-59-109-சி)

வலி வடக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அளவெட்டி தெற்கு, செல்வி நளாயினி இராஜகோபால் (வயது 20) துர்க்காபுரம், தெல்லிப்பழை, செல்வி சியாமினி பாமினி (வயது 16) அளவெட்டி வடக்கு, கந்தன் சண்முகநாதன் (27 வயது) குருக்கள் கிணத்தடி அளவெட்டி குழந்தை சுஜிந்திரன் (வயது 3) அளவெட்டி, அ. குணரட்ணம் (வயது 55) மயிலிட்டி, திருமதி இராசலட்சுமி நவரட்ணம் (வயது49) அளவெட்டி கைலாசபிள்ளை (வயது 55) அளவெட்டி, நடராசா தயாபரன் (14 வயது), குருக்கள்கிணத்தடி, அளவெட்டி, மோகன் ராஜ்குமார் (22 வயது) அளவெட்டி வடக்கு, தோமஸ் விக்டர் கீத பொன்கலன் (23 வயது) மாதகல், பொன்னுச்சாமி சத்தியநாதன் (33 வயது) அளவெட்டி வடக்கு, பொன்னுச்சாமி சண்முகரத்தினராசா (55 வயது) அளவெட்டி வடக்கு, தேவாமிர்தம் விஜயபாலசிங்கம் 49 வயது) மாதகல் செல்வி சாந்தி காதிரேசு (20 வயது) சுன்னாகம், ஞானப்பிரகாசம் அல்வின் (55வயது) சுன்னாகம், ஜெயராசசிங்கம் நிமிலன் (14 வயது) அளவெட்டு, யாக்கோபு றஞ்சன் (24 வயது) இளவாலை. (56-ரி)

## இரத்ததானம் செய்க

[யாழ்ப்பாணம்]

யாழ். குடாப் பகுதியில் நேற்றுஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கையினால் விமான, ஷெல் பீரங்கி, துப்பாக்கிச்சூட்டிற்குள்ளாகி பலத்தகாயமடைந்துவரும் நூற்றுக்கணக்க னமக்களின் உயிரினைக்காப்பாற்றுவதற்கு இரத்ததானம் செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இரத்ததானம் செய்ய விரும்புவோர் இரத்த வங்கியில் தொடர்பு கொண்டு இரத்ததானம செய்யும்படி கேட்கப்பட்டுள்ளனர். (56-சி)

## புதிய இந்தியத் தூதர்

(புதுடில்லி)

இலங்கைக்கான புதிய இந்தியத் தூதராக திரு. ராமேஸ்வர் தயாளை நியமிக்க இந்திய அரசு முடிவு செய்துள்ளது. (சி)

க. பொ. த.

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ளால் இப்பகுதி மாணவாகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஏனைய இடங்களில் ஊரடங்குச் சட்ட வேளையிலும் பரீட்சைகள் இடம்பெற்றது. வைத்தியசாலை, கடைகள், அரச நிறுவனங்கள் வழமை போல் இயங்கின. (56)

200க்கும்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வயது முதிர்ந்தவர்கள், நடக்க முடியாமல் நோய்வாய்ப்பட்டிருந்தவர்கள், வீட்டு உடமைகளை எடுக்கவென தாமதித்து நின்றவர்கள் மற்றும் பலர் இவவாறு அகப்பட்டதாகக் கூறப்படுகிறது.

தமது பிடியில் சிக்கியவர்களை இராணுவத்தினர் தடுத்துவைத்துள்ளனர். [86-56]

நவீன

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கைக்கு 'ஒபரேஷன் பூகம்பம்' என இராணுவம் பெயர் சூட்டியுள்ளது.

ஆகஸ்ட் 10ம் நாள் தொடங்க இருந்த இந்த இராணுவத் தாக்குதல அராலி சந்தி கண்ணிவெடிச் சம்பவத்தினால் ஒத்திவைககப்பட்டது.

யாழ்ப்பாணத்தின் மீதான இந்தத்தாக்குதல மேலும் ஒத்திப்போடுவது இராணுவத்தினரின் உறுதியையும் மனநிலையையும் குலைக்கும் என்பதால் உடனடியாக இந்த இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக கூறப்பட்டுகிறது.

மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வா தலைமையில் நடைபெறும் இந்த புதியதாக்குதலின் இறுதிமுடிவு சந்தேகத்துக்குரியதாக இருக்கின்றது.

பலாலி விமானப்படை தற்போது தாக்குதலுக்கு பெரிதும் பயன்படுத்தப்படுகின்றது என்று இராணுவத் தரப்பில் செய்திகள் தெரிவிக்கின்றன.

விமானப்படை, தரைப்படை, கடற்படை என்று முழுப்படைகளுடன் போரில் இறங்கியிருககும் இராணுவம் தனது கப்பற்படையை உஷார்நிலையில் வைத்துள்ளது.

புலிகளின் கைவசமுள்ள கடற்கரைப் பகுதிகளை கைப்பற்றி புலிகளுக்கு பொருட்கள் வரும் பாதைகளை தடைப்படுத்தி, யாழ்ப்பாண நகரை கைப்பற்ற தாக்குதல் நடத்த தமக்கு தேவைபடும் சில முக்கிய பகுதிகளைக் கைப்பற்றுவதுமே தமது நோக்கமாக உள்ளதென இராணுவ வட்டாரங்கள் கூறியுள்ளன.

கண்ணிவெடிகளாலும், புலிப்போராளிகளினாலும் சூழப்பட்டிருக்கும் யாழ்ப்பாணத்தை கைப்பற்றுவது கடினம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (சு-ரி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன்கோவில் மேற்கு வீதி 66இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/1

## பேச்சுவார்த்தைக்கான

# போர் இது-பிரட்மன் கூறுகிறார்

(கொழும்பு)

யாழ் குடாமீது ஆரம்பிக்கப்பட்டுள்ள போரானது பேச்சுவார்த்தைக்கான ஒரு போராகவே கருதப்படுவதாக திரு பிரட்மன் வீரக்கோன் பி. பி ஸி. க்கு தெரிவிதது்ளார்.

புலிகள்மீது ஒரு நெருக்கடியை ஏற்படுத்தி அதன்மூலம் அவர்களை பேச்சுவார்த்தைக்குக் கொண்டுவர படையினர் முயல்வர் எனவும் கூறினார்.

இந்த யுத்தத்தில் புலிகள் மிகக் கடும் எதிர்த்தாக்குதலை கொடுப்பார்கள் என்பதையும் அவர் ஒப்புக்கொண்டார் (சி)

## பரு. துறைமுகத்தில் குமாரி

# கப்பலிலிருந்து பொருட்கள் இறக்கும் வேலை நிறுத்தம்

(புலோலி)

குமாரி கப்பலிலிருந்து பொருட்கள் இறக்கும்பணி நேற்றைய தினம் திடீரென நிறுத்தப்பட்டது.

யாழ் மாவட்டத்தில் ஊரடங்ச் சட்டம் அமுல் செய்யப்பட்ட போதிலும் குமாரி கப்பலிலிருந்து பொருட்கள் இறக்கும் பணி பருத்தித்துறையில் நேற்று ஆரம்பமானது.

இரண்டு இழுவைப் படகுகளில் (பாஜ்) பொருட்கள் இறக்கப்பட்டதும் மேலிடத்தின் உத்தரவின் பேரில் இப பணி நிறுத்தப்பட்டது.

இதையடுத்து 11 மணியளவில் குமாரி கப்பல் காங்கேசனதுறைக்கு திரும்பிச் சென்றது. [61]

மன்னாரில் விமானப்படைமுகாம்;

# புதிதாக அமைப்பு

(கொழும்பு)

மன்னார் தள்ளாடி இராணுவ முகாமில் விமானப்படை முகாம் ஒன்று அமைக்கப்பட்டு விமான ஓடுபாதையும் அமைக்கப்பட்டுள்ளது.

யாழ் குடாவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள 'ஒபரேஷன் பூகம்பம்' படை நடவடிக்கைககு உதவவே இந்த துரித ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாம்.

இங்கிருந்து விமானங்கள் வெடிகுண்டுகளை ஏற்றிச் சென்று தாக்குதல் நடத்தவுள்ளதாம். (சி)

## பத்திரிகையாளர்கள்

# நேற்று பகிஷ்கரிப்பு

(கொழும்பு)

கொழும்பில் நேற்று நடைபெற்ற வாராந்தப பத்திரிகையாளர் மாநாட்டை உள்நாட்டு, வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் பலர் பகிஷ்கரித்துள்ளனர்

அரசுக்கு எதிரான எதிர்க்கட்சியினரின் கையெழுத்துப் போராட்டத்தில் செய்தி சேகரிக்கச் சென்ற பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டது சம்பந்தமாக பொலிசாரின் விசாரணை திருப்தியளிக்கவில்லை எனக் கூறியே இவர்கள் இந்தப் பத்திரிகையாளர் மாநாட்டை பகிஷ்கரித்தனர். (சி)

## எதிர்க்கட்சி எம். பி.க்கள்

# கறுப்பு பட்டி போர்

(கொழும்பு)

நாடாளுமன்றம் நேற்றுக் காலை ஆரம்பமான போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கறுப்புப்பட்டிகள் அணிந்தவாறு உள்ளே நுழைந்தனர்

சிறிலங்கா சுதந்திர கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, ஐக்கிய சோஷலிச முன்னணி உறுப்பினர்களே கறுப்பு பட்டிகளை அணிந்தவாறு வந்தனர்.

லெப். ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ உட்பட ஒன்பது படை அதிகாரிகளின் மரணம் குறித்து கவலை தெரிவிப்பதற்காகவே தாம் இவ்வாறு வருகை தந்ததாக எதிர்க்கட்சியினர் தெரிவித்தனர். (ரி)

## யாழ். கரையோர பகுதியில்

# ஷெல், ஹெலி தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ். கடலோரப்பகுதியை நோக்கி நேற்று மாலை 5 மணியளவில் ஹெலி வட்டமிட்டு துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதையடுத்து 5-30 மணியளவில் மண்டைதீவிலிருந்து யாழ். நகரப் பகுதியை நோக்கி 50 கலிபர் தாக்குதலையும் ஷெல் தாக்குதலையும் மேற்கொண்டனர்.

கொட்டடி, கோட்டை, பிரதானவீதி தண்ணீர் தாங்கியடி பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. (56-வி)

ஹெலி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

புலிகள் தாக்குதல் நடாத்தியுள்ளனர்

பல தடவை துப்பாக்கி இவற்றை நோக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதால் சீ-பிளேனும், ஹெலியும் மிக உயரத்திற்குச் சென்று அப்பகுதிகளை விட்டகன்றன.

ஹெலிக்கொப்டர் முதலில் இப்பகுதிகளில் துப்பாக்கி வேட்டுககளைத் தீர்த்தபடி இருந்ததாம். [56]

10,000 மக்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புடன் மட்டும் வெளியேறிய பரிதாபகரமான காட்சி நெஞ்சை நெகிழவைத்தது

உடமைகளையே எடுத்துக் கொள்ள முடியாமல் உடுத்த உடுப்புடன் உயிரைக் காப்பாற்றிக்கொள்வதற்காக மக்கள்ஓடினார்கள். (56-86-ரி-109)

முரசொலி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வைத்து மறியல் போராட்டம் நடத்தப்பட்டது.

மறியல் போராட்டத்தின் பின்னர் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்று தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இளம்பரிதியிடம் கையளிக்கப்பட்டது.